செய்தி வெளியீடு எண்: 499 நாள் :17.09.2013

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (17.9.2013) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் சேலம் ஆயுதப்படை வளாகத்தில் 11 கோடியே 24 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 160 காவல் துறை குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மற்றும் தீயணைப்புத் துறை சார்ந்த 13 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, 92 கோடியே 45 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களைக் திறந்து வைத்தார்கள்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும் மாநிலத்தில் அமைதியான சூழ்நிலை நிலவுவதை உறுதி செய்வதிலும் காவல்துறை முக்கியக் கடமையாற்றுகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் மேம்படும் வண்ணம் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அதனடிப்படையில், சேலம் மாவட்டம் – சேலம் ஆயுதப்படை வளாகம் மற்றும் மல்லூர் ஆகிய இடங்களில் 162 குடியிருப்புகள்; சென்னை – வேளச்சேரியில் 4 குடியிருப்புகள்; அரியலூர் மாவட்டம் – அரியலூரில் 148 குடியிருப்புகள்; ஈரோடு மாவட்டம் – அந்தியூரில் 16 குடியிருப்புகள்; காஞ்சிபுரம் மாவட்டம் – ஊனமாஞ்சேரியில் 54 குடியிருப்புகள்; கன்னியாகுமரி மாவட்டம் – தெற்கு தாமரை குளத்தில் 18 குடியிருப்புகள்; கோயம்புத்தூர் மாவட்டம் – கோவைபுதூரில் 23 குடியிருப்புகள்; மதுரை மாவட்டம் – வில்லூர் மற்றும் மதுரை ஆயுதப்படை வளாகம் ஆகிய இடங்களில் 488 குடியிருப்புகள்; சிவகங்கை மாவட்டம் – எஸ்.வி. மங்களத்தில் 1 குடியிருப்பு; தஞ்சாவூர் மாவட்டம் – பேராவூரணியில் 21 குடியிருப்புகள்; தேனி மாவட்டம் – சின்னமனூரில் 15 குடியிருப்புகள்; நீலகிரி மாவட்டம் – ஜெயில் ஹில்லில் 20 குடியிருப்புகள்; திருவள்ளூர் மாவட்டம் – பள்ளிப்பட்டில் 8 குடியிருப்புகள்; திருவாரூர் மாவட்டம் – மன்னார்குடி மற்றும் பேரளம் ஆகிய இடங்களில் 14 குடியிருப்புகள்; தூத்துக்குடி மாவட்டம் – காடல்குடியில் 1 குடியிருப்பு; திருநெல்வேலி மாவட்டம் – திருநெல்வேலி மாநகர ஆயுதப்படை வளாகம் மற்றும் பனங்குடி ஆகிய இடங்களில் 146 குடியிருப்புகள்; விருதுநகர் மாவட்டம் – எம். ரெட்டியாபட்டியில் 13 குடியிருப்புகள், என மொத்தம் 72 கோடியே 19 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1152 காவல் துறை குடியிருப்புகள்;

சென்னை மாநகரில் – செம்பியம் மற்றும் முத்தையால்பேட்டை; கடலூர் மாவட்டம் – கடலூர் O.T.; திண்டுக்கல் மாவட்டம் - வேடசந்தூர்; ஈரோடு மாவட்டம் – பவானி மற்றும் மலையம்பாளையம்; காஞ்சிபுரம் மாவட்டம் – அச்சரப்பாக்கம், கூடுவாஞ்சேரி மற்றும் ஓரத்தி; கன்னியாகுமரி மாவட்டம் – நேசமணி நகர், குலசேகரம் மற்றும் குளச்சல்; கரூர் மாவட்டம் – வெங்கமேடு; நாகப்பட்டினம் மாவட்டம் – திட்டச்சேரி; பெரம்பலூர் மாவட்டம் – மங்களமேடு மற்றும் பெரம்பலூர்; புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வகோட்டை, அதனகோட்டை மற்றும் திருபுனவாசல்; சேலம் மாவட்டம் – ஆத்தூர்; தஞ்சாவூர் மாவட்டம் – திருவையாறு மற்றும் கும்பகோணம்; தேனி மாவட்டம் – தேவதானப்பட்டி, ஓடைப்பட்டி மற்றும் குரங்கணி; திருவண்ணாமலை மாவட்டம் – சாத்தூர் அணை; திருவாரூர் மாவட்டம் – கோட்டூர், திருத்துறைபூண்டி மற்றும் மன்னார்குடி; திருநெல்வேலி மாவட்டம் – திருவேங்கடம் மற்றும் ஆழ்வார்குறிச்சி; திருப்பூர் மாவட்டம் – குடிமங்களம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – உறையூர்; வேலூர் மாவட்டம் – ராணிப்பேட்டையில் இரண்டு காவல்நிலையங்கள், கந்திளி, ஆலங்காயம், சோளிங்கர், வேப்பங்குப்பம், அம்பலூர், தக்கோலம், மற்றும் வாணியம்பாடியில் நான்கு காவல்நிலையங்கள்; விழுப்புரம் மாவட்டம் – திருநாவலூர் மற்றும் கனை; விருதுநகர் மாவட்டம் – ராஜபாளையம் (தெற்கு) மற்றும் ஏ. முக்குளம் ஆகிய இடங்களில் **19** கோடியே **82** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள **49** காவல் நிலையங்கள்;

தேனி மாவட்டம் – ஆண்டிபட்டி மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – புதுக்கோட்டை ஆகிய இடங்களில் **56** லட்சத்து **88** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **2** அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்;

ஈரோடு – சிறப்பு புலனாய்வுத் துறைக்கான காவல் நிலையம்; மதுரை – தடய அறிவியல் ஆய்வகத்திற்கான டி.என்.ஏ. பிரிவு அலுவலகம்; தூத்துக்குடி – ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் நிலையம்; பேராவூரணி காவலர் பயிற்சி பள்ளிக்கு கூடுதல் வசதி மற்றும் புன்னக்காயல் சோதனை சாவடி; திருநெல்வேலி மாவட்டம் – சேரன்மாதேவி; விழுப்புரம் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை மற்றும் திண்டிவனம் ஆகிய மூன்று இடங்களில் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு; விருதுநகர் மாவட்டம் – ராஜபாளையத்தில் தமிழ்நாடு சிறப்பு காவல் **11**ஆம் படை இயக்ககக் கட்டடம், என மொத்தம் **6** கோடியே **88** லட்சத்து **82** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள **9** புதிய கட்டடங்கள்;

திருவாரூர் மாவட்டம் – கூத்தாநல்லூர், திருவள்ளூர் மாவட்டம் – பள்ளிப்பட்டு, நாகப்பட்டினம் மாவட்டம் – சீர்காழி, திருப்பூர் மாவட்டம் – திருப்பூர் (தெற்கு) ஆகிய இடங்களில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்;

விழுப்புரம் மாவட்டம் – உளுந்தூர்பேட்டையில் 25 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குடியிருப்புகள்; திருவள்ளூர் மாவட்டம் – திருப்பெரும்புதூரில் 13 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குடியிருப்புகள், என மொத்தம் 2 கோடியே 83 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 38 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குடியிருப்புகள்;

என மொத்தம், 103 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – எழும்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் ஆலந்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிற்கு 13 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., உள்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு கே. ராமானுஜம், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / காவல்துறை இயக்குநர் திரு அனூப் ஜெய்ஸ்வால், இ.கா.ப., ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநர் / காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு எஸ்.கே. டோக்ரா, இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு எஸ். ஜார்ஜ், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் / காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு ஆர்.சி. குடவ்லா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 17.9.2013